**IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI**

| O.S. No. 45/2012 | | | |
|---|---|---|---|
| Name: | சுப்பிரமணி | Religion: | |
| Father's Name: | ராமசாமி | Caste: | |
| Village: | கத்தேரி | Calling: | விவசாயம் |
| Taluk: | சங்ககிரி | Age: | 39 |

Date: 4.9.2019 – PW – 1

வாதி தரப்பில் சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

2 ஆம் வாதி பெருமாளுடைய அப்பா பெயர் பழனியப்பன் என்றால் ஆமாம். 7 ஆம் பிரதிவாதி பழனியப்பனின் அப்பா பெயர் பழனிவேல்கவுண்டர் என்றால் அது தெரியவில்லை. 7 ஆம் பிரதிவாதி பழனியப்பனின் அப்பாவும், 2 ஆம் வாதி பெருமாளுடைய அப்பாவும் அண்ணன், தம்பி என்றால் ஆமாம். 2, 3 பிரதிவாதிகள் 1 ஆம் பிரதிவாதியின் மகன் மற்றும் மகள் என்றால் ஆமாம். 4, 5 பிரதிவாதிகள் 2 ஆம் பிரதிவாதியின் மகன் மற்றும் மகள் என்றால் ஆமாம். 6 ஆம் பிரதிவாதி முத்துசாமி, 2 ஆம் பிரதிவாதி ராமசாமி வகையறாவிடம் இருந்து 0.55 1/2 செண்ட் நிலம் வாங்கியுள்ளதால் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்துள்ளோம் என்றால் ஆமாம். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். மொத்த விஸ்தீரணம் என்னவென்றால் 10 ஏக்கர் 87 செண்ட். வழக்கில் எவ்வளவு விஸ்தீரணம் காட்டப்பட்டுள்ளது என்றால் 10 ஏக்கர் 87 செண்ட். தாவா சொத்துக்கள் எந்த கிராமத்தில் உள்ளது என்றால் கத்தேரி கிராமத்தில் உள்ளது. சர்வே எண். என்ன என்றால் 427. வழக்குரையில் 429 என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். சொத்துக்கள் ஆதியில் யாருக்கு பாத்தியம் என்றால் என் பாட்டி மாராயி, முனியப்பகவுண்டர் மற்றும் பழனியப்பகவுண்டர் அனைவருக்கும் பாத்தியம். எப்படி பாத்தியம் என்றால் பூர்வீக சொத்து. அவர்கள் கிரயம் ஏதாவது வாங்கினார்களா என்றால் தெரியவில்லை. எல்லாமே பூர்வீக சொத்துதான். அவர்களுக்கு எப்படி பாத்தியம் என்பதை பட்டாவோ, கிரயப் பத்திரமோ தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். பாகக்கறார் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். குறிப்பான எந்த ஆவணம் மூலம் பாத்தியம் என்பதை சொல்ல முடியாது என்றால் ஆமாம். அது மிக பழைய சொத்து.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/- Subramani

**Sd/- M. Mekala Mythili,**
**Subordinate Judge,**
**Sankari.**